28th March 1961]

Village officials (collection of taxes)

* 1133 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether village officials are entrusted with the work of collecting taxes for the Panchayats; and

(*b*) if so, the remuneration paid to them therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The village Headmen have been entrusted with the duty of collecting taxes and fees due to Panchayats.

(*b*) At the rate of Rs. 7 per month if he has a normal charge; and at the rate of Rs. 5 per month if he has a light charge.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ஜில்லாதோறும் நடந்த செமினர்களிலும், சென்னைக்கு வந்து நடத்தின செமினாரிலும் வில்லேஜ் ஆபீசர்களைப் போடக்கூடாது என்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் ஒவ்வொரு வில்லேஜ் பஞ்சாயத்துக்கும் கேள்விகள் கேட்கப் பட்டபோது அநேகமாக எல்லா பஞ்சாயத்துக்களும் ஏகமனதாக அவ்வாறு செய்வது அவசியம் இல்லையென்று தெரிவித்திருந்தும் சர்க்கார் இத் திட்டத்தை வகுத்திருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. கிராம அதிகாரிகளை இந்த வேலைக்குப் பயன்படுத்தினால் எவ்வளவு ஊதியம் கொடுக்கவேண்டு மென்பதுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிராம அதிகாரிகள் தனி வர்க்கம், மற்றவர்கள் தனி வர்க்கம் என்ற மனப்பான்மையை வளர்ப்பது தவறு என்பது என் கருத்து.

SRI A. R. SUBBIAH MUDALIAR : வில்லேஜ் ஹெட்மென்னி டத்தில் கண்டிப்பாக வரிவசூல் செய்வதைக் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் இல்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரெவின்யூ டிபார்ட்மெண்டு செய்யவேண்டுமென்று இருப்பதனால், ரெவின்யூ டிபார்ட்மெண்டு கிராம அதிகாரிகள் மூலமாகத்தான் செய்யவேண்டியிருக்கும். மற்ற காரியங் களுக்கு அவர்களைப் பயன்படுத்திக்கொள்வதும், கொள்ளாததும், அவர வர்களுடைய இஷ்டம். பஞ்சாயத்துக்களே வரி வசூல் செய்துகொள்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம் என்றால் அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவேதான் இந்த ஏற்பாட்டை சர்க்கார் வகுக்கவேண்டியிருக்கிறது.

SRI V. SUBBIAH : டெவெலப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் கிராம அதிகாரிகள்தான் பணத்தை வசூல் செய்யவேண்டுமென்று பஞ்சாயத்து களிடமிருந்து குறிப்பாக திருச்சி ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வரிகள் வசூல் பண்ணுவதைப் பொறுத்த வரையிலும் கிராம அதிகாரிகள் மூலமாகத்தான் வசூல் செய்ய முடியும். தனி அதிகாரிகள் என்று போட முடியாது. வேறு காரியங்களுக்குக் கர்ணங்களை உபயோகித்துக்கொள்ளலாமா, கூடாதா என்பது அவரவர்களுடைய இஷ்டத்திற்கு விடலாம். இஷ்டம் இல்லா விட்டால் வேண்டாம். ஆனால் கிராம அதிகாரிகளை ஏதோ தாழ்த்தப் பட்டவர்களைப் போலப் பிரசாரம் செய்வது கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI T. IRUSAPPAN : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுக்கும் ஓரளவு சம்பளத்தை உயர்த்துவது போல ஆகாதா இந்த ஏற்பாட்டினால் ? அதே சமயத்தில் பஞ்சாயத்துகளுக்கும் அவர்கள் வேலை பயன்படாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காகத்தான் இந்த இரண்டையும் ஒன்று சேர்ப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்து வருகிறது. கிராமத்திலும் இந்தச் சூழ்நிலை ஏற்படவேண்டுமென்பது என் கருத்து.

[28th March 1961

SRI R. SRINIVASA IYER : செக்ரடரியாகவே கர்ணங்களை நியமனம் செய்துகொள்வதற்கு தஞ்சாவூர் ஜில்லாவில் அநேகமாக எல்லோரும் சம்மதித்திருக்கிறார்களில்லையா ? கர்ணங்களையே செக்ரடரியாக வைத்துக் கொள்வது என்று அவர்கள் தீர்மானித்து இருப்பதனால் வரி வசூல் பண்ணுவது—செஸ் கணக்கு போன்றவைகள் எற்கெனவே செய்து கொண்டிருப்பதனால் அவர்களுக்கு சுலபமாக இருக்காதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் நான் சொன்னேன். வரி வசூல் செய்வதைப் பொறுத்த வரையிலும் கிராம அதிகாரிகள் மூலமாகத்தான் செய்ய முடியும் என்பதைக் குறிப்பிட்டேன். தஞ்சாவூர் ஜில்லாவாசிகள் புத்திசாலிகள். அதனால்தான் கர்ணங்களையே செக்ரடரியாகப் போட்டுக்கொள்ள சம்மதித்துவிட்டார்கள். அதைப் பாராட்டுகிறேன். இதைப் பார்த்தாவது மற்ற ஜில்லாக்களும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : பல பஞ்சாயத்துக்களிலே க்ரூப் ஊழியர்கள் என்று சொல்லப்படுகிறவர்களால் வரி வசூலிக்கப் படுகிறது. இப்படி கிராம அதிகாரிகளிடத்திலே ஒப்படைக்கப்படுகிற வேலை நடக்குமா ? அவர்களை என்ன செய்ய உத்தேசம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சரியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

Tuberculosis (cases of death)

* 1134 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of persons who died of Tuberculosis during the last five years; and

(*b*) the figure in pre-Independence days?

THE HON. SRI M. A. MANICKAVELU :

(*a*) —

Year.	*Number of deaths due to Tuberculosis.*
1955	3,180
1956	3,098
1957	3,256
1958	2,918
1959	3,069

(*b*) —

Year.	*Number of deaths.*
1941	3,691
1942	3,391
1943	3,784
1944 1945 1946 1947	Not available as separate figures were not compiled.